# தொன்போஸ்கோ இடம்பெயர்ந்தோர் பணி

**(சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மற்றும் திருவள்ளுவர் மாவட்டம்)**

தொன் போஸ்கோ இடம்பெயர்ந்தோர் பணிகள் 2015ம் ஆண்டு சென்னை சலேசிய மாநிலத்தில் தொடங்கப்பட்டது. இப்பணி சலேசிய பேரவையின் தீர்மானத்தின் விளைவே. இப்பணிளை ஆரம்பிக்க பணி.பிராண்சிஸ் போஸைகோ தலைமையில் ஒரு குழுமத்தை பொறுப்பாக அமர்த்தினர். இப்பணி சுமை தூக்குவோர், கட்டிடம், செங்கல் சூளை, உற்பத்தியில் தினக்கூலிகள், மசாஜ் பார்லர், சலூன், இருளர் போன்ற அமைப்புசாரா பணிகளில் வேலை செய்யும் இடம்பெயர்ந்தோர்க்கான உரிமை மற்றும் நலப்பணிகள் செய்து வருகின்றது.

**இலக்கு மக்கள்:**

- தமிழக அமைப்புசாரா தொழிலாளர்கள் கிராமங்கிலிருந்து நகரங்கள் நோக்கி, குறிப்பாக சென்னையில் (சுமை தூக்வோர், கட்டிடம், செங்கல் சூளை துப்புரவு, கூலி, தினககூலி, வீட்டு வேலை) இளம் தொழிலாளர்களுக்காக பணி செய்கின்றது
- இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களிலிருந்து தமிழகத்தை நோக்கி வரும், குறிப்பாக (சென்னை, செங்கற்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளுவர், )மாவட்டங்களுக்கு பணி செய்ய வரும் வடமாநில இடம்பெயர்நத இளம் தொழிலளர்களுக்காக பணி செய்கின்றது.

**இடம்பெயர்ந்தோர் பணிக்கான குழுமம்**

- சலேசியர்கள் - பணி.பிரான்சிஸ் போஸ்கோ, பணி.கிஷோர்
- யேசு சபையினர் - பணி வில்லியம், பணி ஹென்றி
- OMI – பணி பிரிட்டோ, பணி.நிர்மல் திர்கி
- Servites
- தூய இருதய சகோதரர்கள் - சகொ சவரி
- திருமதி கீதா அம்மையார்(அமைப்புசாரா தொழிலாளர்கள் சங்கம்)
- NAPM – National alliance political movement
- Prof. Bernardi sami
- Mr.Umi Daniel (Hyderabad)
- Rajiv Gandhi National Institute of Youth development, Sriperumbdur

| TYPE | PLACE OF ORIGIN | SECTORS | PLACE OF DESTINATION | DISTRICT |
|---|---|---|---|---|
| TN Intra-District (Unorganised Workers) | Villupuram Tiruvannamalai Cuddalore | Daily wages | Saligramam,Nelson manikam road, B&C mill road,Avadi tank road, Ekkatuthangal etc | Villupuram, Tiruvannamalai & Cuddalore |
| | | Evicted Slums | OMR, Padapai, Gudapakkam, Ennore | |
| | | Koyambedu Market | Flower, Fruit, Vegetable market | |
| | | Koyambedu & Madhavaram Bus stand | Bus stand | |
| Inter-State (Migrants) | 1.UP, Bihar, Jharkhand Orissa & Andhra | Construction sites(Chennai) | Casagrande-Madhavaram, Bypass TNHB – Games village(Koyambedu), Tiruvattiyur,Avadi,Korattur, Ennore, Manali Town | Chennai |
| | | Brick Kilns(Tiruvalluvar Dt) | SBI, SLG,SLGB,SBIW,TMD, SSV,BBW, BBI,RER,BBR | Tiruvalluvar |
| | 2. Orissa | Casual labourers – Industrial Estate | Sriperumbdur SIPCOT, Irugattukottai SIPCOT, Ambattur Estate, Gummidipoondi SIPCOT, Manali Estate, Tirumudivakkam SIDCO | Kancheepuram, Chengelpet & Tiruvalluvar |
| | 3. Assam, Nagaland & Manipur | Hospitality, Mall, Spa & Salloon | Annanagar, Adambakkam, Adayar | Chennai |
| | 4.Andhra | Irular | Ponniamedu, Thatthankandigai, Valuthalambedu, Arani, Kallur, Memalur, Sethilpakkam | Tiruvalluvar |

**சுமை தூக்குவோர் பணி**

இடம்பெயர்ந்தோர்க்கான பணி முதலில் சென்னையை மையமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. சென்னையில் உள்ள கோயம்பேடு காய்கறி, பழம், பூ போன்ற சந்தைகளிலும் மற்றும் கோயம்பேடு பேருந்து நிலையத்திலும் ஆரம்பிக்கப்பட்டது. பெரும்பாலும் இங்கு சுமை தூக்கும் தொழிலாளர்கள் விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கோயம்பேட்டு சந்தையில் சுமை தூக்குகின்றார்கள். உடலின் வலிமையை வைத்தே இவர்களின் பணியாகும். புல இளைஞர்கள் சுமை தூக்குவதை நாம் காணலாம். சுமார் 25000க்கு மேலான சுமை தூக்குவோரை இச்சந்தையில் நாம் காணலாம்.

பொதுவாக இத்தொழிலாளர்கள் தங்கள் குடும்பங்களை விட்டுவிட்டு இச்சந்தையில் பணி செய்கின்றார்கள். கடை முதலாளிகள் தங்களின் பொருட்களை லாரிகளிலிருந்து இறக்குவதற்காக 5லிருந்து 10 சுமை தூக்கும் தொழிலாளர்களை தங்கள் வசம் வைத்து கொள்வர். அவர்களுக்கு தங்கள் கடையிலேயே தங்கவும் செய்துவிடுவர். குளிப்பதற்கும் கழிவரைக்கும் பொதுவாக உள்ளவற்றை பயன்படுத்தி கொள்வர். காலை 2மணியிலிருந்து 10 மணிவரைக்குள் இவர்களின் பணி. இச்சந்தையில் மொத்த வியாபாரம் மற்றும் சில்லரை வியாபாரம் உள்ளது. மொத்த வியாபாரம் காலை 1மணியிலிருந்து 10 மணி வரைக்குள் முடிந்துவிடும். சில்லரை வியாபாரம் மற்ற நேரங்களில் நடக்கும். தொழிலாளர்கள் அனைவருக்கும் இரவு நேரத்திலிருந்து காலை 10 மணி வரை சுமை தூக்கும் பணி இருக்கும். மேஸ்த்திரியின் கீழ் பல தொழிலார்கள் பணி அமர்த்தப்படுவர். காய்கறிகள், பழங்கள், பூக்கள் மூட்டைகள் பல மாவட்டங்கள், மாநிலங்களிலிருந்து இரவு மற்றம் விடியற்காலையில் இறங்கும். இம்மூட்டைகளை தங்கள் முதலாளியின் கடைகளுக்கோ அல்லது மேஸ்த்திரியின் மூலமோ இறக்கி கடைகளுக்கு எடுத்து செல்வதே இவர்களின் பணி. காலை வேளையில் மட்டுமே இவ்களின் மூட்டை தூக்கும் சம்பளம் ரூ.500 ஆகும். திருவிழாக்களுக்காக தங்கள் ஊருக்கு செல்லுவார்கள். பெரும்பாலும் இவர்கள் கல்வி தேர்ச்சியற்றவர்கள்.

தொன்போஸ்கோ இடம்பெயர்ந்தோர் பணி:

- சந்தையில் தங்குவதற்கு இடமில்லாததால் உறைவிடம் ஆரம்ப்பிக்கப்பட்டது
- தொழிலாளர்களுக்கு பணி நீக்கம் செய்யாமலிருக்க தொழிலாளர் துறையின் மூலம் லைசன்ஸ் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன
- தொழிலாளர்களின் மருத்துவ வசதிகள், முகாம்கள் நடத்தப்பட்டன
- தொழிலாளர்கள் உடல் உழைப்போர் நலவாரியத்தில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றன
- குடி, போதை குழந்தைகள் கல்வி, மற்றும் சேமிப்பு பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன
- குடும்பத்திற்கு சம்பாதித்த பணம் அனுப்புதல் முறைப்படுத்தப்பட்டன

- இளம் தொழிலாளர்களுக்கு மாலை நேரங்களில் விளையாட்டுகள் முறைப்படுத்தப்பட்டன
- தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி, உயர்கல்வி வசதிகள் வழங்கப்பட்டன
- தொழிலாளிகள் முதலாளிகளாகவும் வியாபாரம் தொடங்க பயிற்சிகள் உதவிகள் வழங்கப்பட்டன
- பூக்கடைகளில் உள்ள சில்லரை வியாபாரத்தில் உள்ள பெண்கள் மத்தியில் சுயஉதவி குழுக்கள் தொடங்கப்பட்டன

**கட்டுமான பணிகள்**

'SMART CITIES' என்ற வளர்ச்சி திட்டத்தினால் தமிழ்நாட்டில் பல நகரங்கள் பெரும்கட்டிட கட்டும் பணிகளில் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. சென்னை, கோயம்பத்தூர், மதுரை, திருச்சி, சேலம் போன்ற மாநகராட்சிகளிலில் இத்தொழிலகள் தொடங்கப்பட்டன. இக்கட்டிட பணிக்கு தமிழகத்திலிருந்து குறைவான தொழிலாளர்களே, மற்ற மாநில்களிலிருந்து இத்தொழில் புரிய வருபவர்கள் அதிகம். வட மாநிலங்களை சார்ந்த இளைஞர்கள் இக்கட்டிட பணிக்கு வருவதை நம்மால் பார்க்க முடிகின்றது

பீகார், ஜார்க்கண்ட், உத்திரபிரதேசம், சத்திஸ்கர், ஆந்திரா, ஒரிசா, கொல்கத்தா, மணிப்பூர், அஸாம், நாகாலாந்து போன்ற மாநிலங்களிலிருந்து இளம் தொழிலாளர்கள் பிழைப்பிற்காக தென்னிந்திய மாநிலங்கள் தமிழ்நாடு, கர்நாடகா, மும்பாய் மற்றும் கேரளா மாநிலங்களுக்கு வருவதை கானலாம். காண்டிராக்டர்கள் மூலம் இவர்கள் பணியமர்த்தப்படுகின்றார்கள். நகரங்களில் பெரிய கட்டிடங்களை கட்டும் இத்தொழிலாளர்களுக்கு அக்கட்டிடங்களிலே தங்க இடம் கிடையாது. தகரங்களை கொண்ட உறைவிடங்கள், கழிப்பறைகள், குளியல் அறைகள் போதாத நிலை, நல்ல குடி தண்ணீர் அரிது, மொத்தத்தில் குப்பைகூடத்தில் உறைவிடங்கள் இருப்பதை காணலாம். சில நேரங்களில் பெண் தொழிலாளர்கள் தங்குமிடங்களில் போதிய வசதிகள் இல்லாததை காணலாம். குழந்தைகளும் சிமென்ட், கம்பி, செங்கல் போன்ற மாசுபட்ட,ஆபத்து நிறைந்த சுழலில் வளர்வதை பார்க்க முடிகின்றது.

வேலைக்கு போனால் சம்பளம். உடம்பு சரியில்லையெனில் பணம் இல்லை கவனிப்போர் இல்லை. தினக்கூலி ரு300லிருந்து 400 வரை. தினமும் 12 மணி வரை வேலை. ஞாயிறும் வேலை உள்ளது. தனியாக வந்து பணி செய்வோர்,அவர்களே கூட்டாக சமைத்து கொள்கின்றனர். வேறு சிலர் காண்டிராக்டர் மூலமாக சமைத்து கொள்ககின்றார்கள். குடும்பமாக வருகின்றவர்கள் தாங்களே சமைத்து கொள்கின்றனர். மருத்தவ வசதி, உணவு பாதுகாப்பு, வேலைவயில் பாதுகாப்பு, பாதுகாப்பு கருவிகள் வழங்காதது, குழந்தைகள் நலன், PF வழங்காதது, பணி செய்யும் நிறுவனத்தின் அங்கீகாரமின்மை,காண்டிராக்டர் பொறுப்பின்மை, விபத்துகள், இறப்புக்கள் போன்ற பல சவால்கள் இத்தொழிலாளர்கள் சந்திப்பதை பார்க்க முடிகின்றது.

தொன் போஸ்கோ இடம்பெயர்ந்தோரின் பணிகள்:

- ஆதார், வங்கி கணக்கு, ரேசன் கார்டு, மருத்தவ காப்பீடு, போன்ற அடையாள கார்டுகள் வசதி மேற்கொள்வது
- பாதுகாப்பான இடம் பெயர்தல் உதவுதல், தங்கள் கிராமங்களிலிருந்து பணி செய்யும் இடம் வரை
- பாதுகாப்பான பணி, பாதுகாப்பான கருவி வழங்குதல், தங்குமிடங்கள், சரிபார்த்தல்
- மருத்தவ நலன், குழந்தைகள் கல்வி நலன் மற்றும் ரேசன் கடைகளில் உணவு பெற்று தருதல்
- குறைந்தபட்ச கூலி, PF, ESI, 8மணி நேர வேலை, OT வேலைக்கான கூலி, Pass book, பணிநியமத்திற்கான ஒப்பந்தம் கடிதம், போன்ற தொழிலாளர் உரிமைகள் நிலைநிறுத்துதல் மற்றும் விழிப்புணர்வு வழங்குதல்.
- தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி வசதிகள் மேற்கொள்ளல்
- இடம்பெயரும் தொழிலாளர்களின் உரிமைகளும், நீதிக்கான சவால்களும், வேலை, ஊதிய பிரச்சினைகள் வழக்காடுதல்
- அனைத்து தொழிலாளர்களின் அரசு துறைகளோடு சேர்ந்து இவர்களுக்கான வசதிகள், உரிமைகள், சலுகைகள் பெறச் செய்தல்
- தொழிலாளர் நலவாரியங்களில் பதிவு செய்தல்
- விளையாட்டு, சுற்றுலா, திருவிழாக்களை சிறப்பித்தல்

**செங்கல் சூளை பணிகள்:**

திருவள்ளுவர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் இப்பணிகளை காணலாம். துமிழகத்திலிருந்து விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர் போன்ற மாவட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் திருவள்ளுவர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பணி புரிவதை காணலாம். மேலும் ஒடியா மாநிலத்திலிருந்து பல தொழிலாளிகள் தமிழகத்தில் இம் மாவட்டங்களில் பணி புரிவதை பார்க்கலாம். 6 மாத காலம் இப்பணி செய்த பின் மீண்டும் தஙகள் ஊருக்கு திரும்பிவிடுவர். இப்பணி குடும்பமாக செய்வது. ஒரு வாரத்திற்கு எததததை செங்கல் ஒரு குடும்பத்தால் செய்ய முடிகிறதோ அதை வைத்து தான் சம்பளம். மூலப்பொருட்கள் கொடுத்துவிடுவர் அதனை செங்கல் ஆக்கும் வரை இவர்கள் பணி. 1000 செங்கற்கள் செய்தால் தமிழர்கள் ஆக இருந்தால் 550ருபாய் வரையிலும். ஆனால் ஒடியா மக்களுக்கு 300ருபாயிலிருந்து 400 ருபாய் வரை தரப்படுகின்றது.

வேரை நேரம் என்று எதுவும் குறிப்பிட்டு இல்லை. அவரவர் ஓர் இலக்கு வைத்து தயார் செய்ய வேண்டும். இப்பணியிலும் 12 மணிக்கு மேல் பணி செய்வதை பார்க்கலாம். கனவன் மனைவி குழந்தைகள் பெரியவர்கள் என்று ஓர் குடும்பத்தின் தொழிலளர்கள் ஆவார்கள். நாய்கள் வசிப்பது போன்று தாழ்வான குடிசை வீடுகள் இவர்கள் தங்குவதற்கும் சமைப்பதற்கும் கொடுக்கப்படும். குளிப்பதற்கு கருப்பு தொட்டிகளுக்கும், கழிவறைகளுக்கு காடுகளுக்கு செல்ல வேண்டும். காய்கறி மற்றும் மாமிசத்திறகு அருகில் உள்ள சந்தைக்கு செல்ல வேண்டும்.

மருத்துவ வசதி, குழந்தைகளின் கல்வி வசதி, போக்குவரத்து வசதி, கோயில் வழிபாடு வசதியற்ற ஓர் பணித்தளம். இவர்களுக்கு காண்டிரர்கடர் மூலம் பணம் கடனாக கொடுக்கப்பட்டு அக்கடனுக்காக பணி செய்ய இவர்கள் இங்கு அழைத்து வரப்படுவர். நவீன கொத்தடிமை போன்று இவர்கள் இங்கு வேலை செய்வர்.

தோன்போஸ்கோ இடம்பெயர்ந்தோர் பணிகள்:

- கட்டுமான நலவாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்தல்
- ஆதார், வங்கி எண், ரேசன் கார்ட், சுகாதார காப்பீடு கார்ட் ஆகியவை பதிவு செய்தல்
- தொழில் துறை, கல்வி துறை, சுகாதார துறை மற்றும் தொழிலாளர்களின் துறைகளோடு சேர்ந்து தொழிலாளாகளின் நலன் பேற்றுதல்
- சுகாதாரம், இருப்பிடம், மருத்துவம், கல்வி வசதிகள் மேம்படுத்துதல்
- தொழிலாளர், உரிமையாளர், அரசு துறைகளோடு தொழிலாளிகளின் சவால்கள், நலன் வசதிகள் மேற்கொள்ளல்
- தொண்டு நிறுவனங்கள், இயக்கங்கள், யூனியன்கள், மக்கள் ஆர்வலர்கள் தொழிலாளர் நலனின் அக்கறை கொள்ளச் செய்தல்
- கொத்தடிமை, குறைந்தபட்ச கூலி, 8 மணி நேர வேலை, போன்ற தொழிலாளர் பிரச்சினைகளை வழக்காடுதல்
- குழந்தைகள் தொழிலை ஒழித்தல், குழந்தைகள் கல்வி மேம்படுத்துதல்
- இறப்பு, விபத்து, இயற்கை பேரிடர், வெள்ளம் போன்ற் ஆபத்துகளில் உதவு செய்தல்

**உற்பத்தியில் தினக்கூலி தொழிலாளர்கள்:**

சிறப்பு பொருளாதார மண்டலங்கள், தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்ற கழகம், மேக் இன் இந்தியா திட்டம – ஆகியவற்றின் வழியாக தொடங்கப்பட்ட தொழில் பூங்காக்களின் பணிபுரியும் வடமாநிலத்தின் தொழிலாளர்களின் நிலையும் பரிதாபமானது.

ஆம்பத்தூர் எஸ்டேட், கிண்டி, மணலி, கும்மிடிப்பூண்டி, திருப்பெரும்புதூர், திருமுடிவாக்கம் - போன்ற பகுதிகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் வடமாநிலத்தவர்களே. இவர்கள் எல்லோரும் தினக்கூலிகள். இவர்கள் எல்லோரும் காண்டிராக்டர்கள் மூலமாக பணியமர்த்தப்படுகின்றார்கள். 12 மணி நேர வேலை, வார விடுமுறை இல்லை, மாதம் 10000 ருபாய்லிருந்து 15000 வரை மாத வருமானம் பெறுகின்றார்கள்.இத்தொழிலாளர்களை எப்பொது வேண்டுமானாலும் வேலையிலிருந்து நீக்கிவிடலாம். நிறுவனத்தின் பணிபுரியும் அடையாள அட்டையும் இவர்களுக்கு வழங்குவதில்லை. பணி செய்யும் இடத்திற்கு அருகில் உள்ள கிராமங்களில் வாடகைக்கு வசித்து வருகின்றனர். ஒரு வீட்டில் 10 பேர் வசிப்பர். கூட்டாக சேர்ந்து சமைத்து கொள்வர். புல இடங்களில் குளிப்பதற்கும் கழிவறைக்கும் வெளியே செல்வர். வுடமாநில் தொழிலாளர்கள் பலா் குடும்பமாக 5 ஆண்டகளுக்கு மேல் பணி செய்து வசித்து வருகின்றனர். இவர்களின் குழந்தைகளும் தமிழ் வழி பள்ளிகளில் படித்து வருகின்றனர். ஆனாலும் பலா் குடும்பத்தோடு வசித்தாலும் தொடா்ந்து இவர்களின் உறவினா்கள், பெற்றோா், பிள்ளைகள் தங்கள் ஊர்களிலே வசித்து வருவதை காண முடிகின்றது.

தொன்போஸ்கோ இடம்பெயா்ந்தோா் பணிகள்:

- தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்தல், தொழிலாளர் இணையத்தில் தொழிலாளா்களாக உரிமையாளா்களை பதிவு செய்ய வைத்தல்
- உறைவிடம், சுகாதாரம், குடிநீா், உணவு, கல்வி, பாதுகாப்பு போன்ற வசதிகள் உரிமையாளா்கள், அரசு துறை, மற்றும் காண்டிராக்டா் மூலமாக வசதிகள் செய்தல்
- தொழிலாளா் உரிமைகள், சவால்கள், முறைகேடுகள், மனித உரிமை மீறல்கள் வழக்காடுதல்
- குறைந்தபட்ச கூலி, PF, ESI, 8 மணி நேர வேலை, வார விடுமுறை, விழிப்புணா்வு செய்தல்
- தொழிலளா்கள் நல சட்டங்கள், புதிய தொழிலாளா் தொகுப்பு சட்டங்கள் விழிப்புணா்வு மற்றும் செயல்படுத்துதல்
- விபத்து. இறப்பு. இய்ற்கை பேரிடா் போன்று அவசர நேரங்களில் துனை நிற்றல்
- குழந்தைகள் கல்வி மேம்படுத்துதல்
- சுற்றுலா, விளையாட்டு, திருவிழாக்கள் கொண்டாடுதல்

**சலூான், மால்ஸ்(Malls)**

ஆஸாம், நாகாலாந்து, மணிப்பூர் போன்ற மாநிலங்களிலிருந்து தமிழகத்தை நோக்கி இளம் தொழிலாளர்கள் முடிவெட்டுதல், மால்ஸ், மசாஜ் பார்லர் போன்ற பணிகளில் வேலை செய்கின்றார்கள். இவர்கள் குறிப்பாக சென்னையில் அண்ணாநகர், சூளைமேடு, ஆதம்பாக்கம், போன்ற பகுதிகளில் கூட்டாக வாடகை வீட்டில் வசித்து வருகின்றனர். மாத சம்பளம் 10000 முதல் 15000 வரை. இவர்கள் பார்பதற்காக அழகாகவும் வெள்ளையாகவும் இருப்பதால் இவர்களை இத்தகைய வேலைக்கு பயன்படுத்தி கொள்கின்றனர். இதுவே இவர்களை ஆபத்துகளிலும் பாலியல் பலாத்காரத்திலும், விபச்சாரத்திலும் இட்டுசெல்கின்றது. இவர்கள் அனைவரும் ஆதிவாசி இனத்தை சேர்ந்தவர்கள். பேச பயப்படுவாகள், அடிமைகளாக பணி செய்யக்கூடியவர்கள்.

**இருளர்கள்:**

ஆந்திரா மாநிலததிருந்து வந்தவர்கள், தெலுங்கு பேசக்கூடியவர்கள். இவர்கள் ஆதிவாசி மக்கள். கும்மிடிபூண்டி, திருவள்ளுவர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் பணி செய்து வருகின்றனர். அரிசி ஆலைகளில், செங்கல் சூலைகளில், விவசாய நிலங்களில், நண்டு பிடித்தல், ஏரி மேட்டு பகுதிகளில் பணி செய்து வசித்து வருகின்றனர். இவர்களுக்கு எந்த அடையாளமும் இல்லை. துற்போது தான் இவர்களின் குழந்தைகளும் பள்ளிக்கு செல்கின்றனர். இவர்கள் பணி செய்யும் இடங்களில் கொத்தடிமைகளாக பயன்படுத்தி கொள்கின்றனர். இவர்களை விடுதலை செய்வது நமது முக்கிய பணியாகும். தங்குவதற்கு உறைவிடம் இல்லை. பொறம்போக்கு நிலத்தில் கூட்டாக குடிசைகளில், பிலாஸ்டிக் தார்பாய்களில் உறைவிடம் அமைத்து வாழ்கின்றனர். இந்திய நாட்டு குடிமக்கள் என்ற எந்த அடையாளமும் இல்லை. ஆதார், வங்கி கணக்கு எண், ஆதிவாசி அட்டை, ரேசன் கார்ட் போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன. இம்மக்களுக்கு நிலமும் பட்டாவும் வாங்க முயற்சிகள் தொன்போஸ்கோ இடம்பெயர்ந்தோர் அமைப்பின் மூலம் செய்த தரப்படுகின்றன. இவர்களின் குழந்தைகளும் பள்ளிக்கு செல்லுகின்றனர்.

.

இறுதியாக….

இடம்பெயர்ந்தோர்கான பணி தொழிலாளர்களை அமைப்புசாரா சங்கங்களாக அமைத்து அவர்களின் சவாலகளுக்கு தாங்களே உரிமைகளை கோருவதற்கான ஓர் அமைப்பாக பணி செய்வது தான் எங்கள் பணி. அனைத்து நல் உள்ளங்கள், அமைப்புக்கள், இயக்கங்கள், யூனியன்கள் மூலமாக இத்தொழிலாளர்களின் உரிமைகளுக்கு குரல் கொடுக்க ஒருங்கிணைப்பதும் எங்களுடைய மைய பணியாகும். இப்பணிக்கு எங்களோடு தோழமை கொள்ள உங்கள் ஒவ்வொருவரையும் அன்போடு அழைக்கின்றோம்.